**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 09–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதிகள் ஆஜர் இல்லை. 1ம்பிரதிவாதி ஆஜர். வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண். 536/2022

பி.வா.சா.1 பிரசாத் த/பெ செங்கோட்டுவேல்

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. உயில் சாட்சியான தங்கராஜ்யை நான் இன்று சாட்சியம் அளிக்க அவரை அழைத்து வந்துள்ளேன். சாட்சி தங்கராஜ் மூலமாக தான் பி.வா.சா.1 ஆவணமான உயில் என் கைக்கு வந்தது என்றால் சரிதான். புன்னியதானம் எங்கு நடந்தது, எத்தனை மணிக்கு நடந்தது என்றால் வாங்கலாம்வலசில் சுமார் காலை 8 மணி அளவில் புன்னியதானம் நடத்தது.

2. மேற்கண்ட புன்னியதானம் நடந்த நிகழ்ச்சியில் தான் மேற்கண்ட உயிலை தங்கராஜ் என்னிடம் கொடுத்தார். தங்கராஜ் என்னுடைய உறவினரல்ல. ஈரோடு மாவட்டத்தில் உள்ள வாங்கலாம்வலசுக்கும் தங்கராஜ் வசிக்கும் நாமக்கல் மாவட்டத்திற்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் சுமார் 55 கீ.மீ தொலைவு தூரம் இருக்கும். தங்கராஜ் எத்தனை மணிக்கு புன்னியதானத்திற்கு வாங்கலாம்வலசுக்கு வந்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

3. மேற்கண்ட புன்னியதானத்திற்கு எவ்வளவு நபர்கள் கலந்து கொண்டார்கள் என்றால் சுமார் 100க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள். புன்னியதான நிகழ்ச்சி மதியம் 12 மணிவரை நடந்தது. புன்னியதானம் நடக்கும் தேதியை சுமார் எத்தனை நாட்களுக்கு முன்பு முடிவு செய்யப்பட்டது என்றால் சுமார் 15–20 நாட்களுக்கு முன்பு முடிவு செய்யப்பட்டது.

4. புன்னியதான நிகழ்ச்சிக்கு தங்கராஜை கலந்து கொள்ளவருமாறு நான் அழைத்து இருந்தேனா என்றால் இல்லை. தங்கராஜ் தன்னிசையாகவே புன்னியதானத்தில் கலந்து கொண்டாரா என்றால் எனக்கு தெரியாது. பி.வா.சா.1 ஆவணமான உயிலில் சாட்சி தங்கராஜை தவிர மற்ற இருசாட்சிகளும் என்னுடைய உறவினர்கள் என்றால் இல்லை.

5. மேற்கண்ட புன்னியதானத்திற்கு பி.வா.சா.1 ஆவணத்தில் கண்டுள்ள சாட்சிகளான செந்தில்குமார், விஜயகுமார் ஆகிய இருவரும் புன்னியதானத்திற்கு வரவில்லை. புன்னியதானத்திற்கு தங்கராஜ் வரும்போது உயில் எடுத்துவந்து என்னிடம் கொடுத்தாரா என்றால் உயிலை எடுத்து வந்தார் மேலும் தங்கராஜ் அனைவரும் முன்னிலையிலும் உயிலை என்னிடம் கொடுத்தார்.

6. மேற்கண்ட உயிலை தங்கராஜ் என்னிடம் கொடுத்தது புன்னியதான நிகழ்ச்சிக்கு பிறகு தான் என்றால் சரிதான். மேற்படி உயிலை தங்கராஜ்யிடம் பெற்று படித்துபார்த்தேனா என்றால் நான் படித்து பார்த்தேன். மேற்படி அந்த உயிலை நான் படிக்கும் போது ஏதாவது அசாதாரண சங்கதிகள் எனக்கு தென்பட்டதா என்றால் இல்லை. மேற்படி பி.வா.சா.1 ஆவணமான பத்திரம் ஈரோட்டில் தயாரித்தும், தட்டச்சு செய்தும் அதற்குரிய தயாரித்தவரின் கையெழுத்தும், தட்டச்சு செய்தவரின் கையெழுத்தும் பெறப்பட்டுள்ளது என்பதும் அந்த ஆவணமானது நாமக்கலில் நோட்டரி பெறப்பட்டுள்ளதும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை நான் தெரிந்து கொண்டேனா என்றால் சரிதான்.

7. தங்கராஜ்யிடம் உயிலில் கண்ட சொத்தானது ஈரோட்டில் உள்ள நிலையில், ஈரோட்டில் தயாரித்து, தட்டச்சு செய்து என்ன காரணத்தினால் நாமக்கல்லில் நோட்டரி அட்டஸ்டேசன் வாங்கப்பட்டது என்பதை நான் கேட்டேனா என்றால் இல்லை. மேற்படி உயிலை ஏன் பதிவு செய்யவில்லை என்று தங்கராஜ்யிடம் நான் கேட்டேனா என்றால் இல்லை. என்னுடைய தாயார் பாப்பு என்ன படித்துள்ளார் என்றால் அவர் படிக்கவில்லை.

8. பி.வா.சா.1 ஆவணம் என் தாயாரால் எழுதி கொடுக்கவும் இல்லை, அதில் உள்ள கையெழுத்தும் என் தாயாரின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. இந்த உயில் ஆனது என் தாயார் இறந்து பிறகு நானும், உயில் கண்ட சாட்சிகளும் சேர்ந்து போலியாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. என் தாயாருக்கு தாவா சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களை உயில் மூலமாக எனக்கு எழுதி கொடுப்பதற்கு என் தாயார் அவருடைய வாழ்நாளில் என்னிடம் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை.

9. நான் சொல்வது போல் புன்னிதானத்தின் அன்று தங்கராஜ் உயிலை என்னிடம் கொடுத்தார் என்பது வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் தங்கராஜ்யிடம் உயிலில் ஏன் என்னுடைய தந்தையாரை சாட்சியாக கையொப்பம் போடசொல்லவில்லை என்பதை கேட்கவில்லையா என்றால் நான் கேட்கவில்லை.

10. உயிலில் கண்ட சொத்துக்களுக்கான சர்வே எண், நான்கு எல்லை மற்றும் விஸ்தீரணம் ஆகியவை குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். மேற்படி உயிலில் போலியானது என்பதால் எனக்கு எவ்வித உரிமையும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை:– இல்லை